**Judicial Form No**.53
(See Rule 42)
**DEPOSITION OF WITNESSES**
(**Chapter XXII**, **Cr**.**P**.**C**.)
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SULUR.**

Calendars
Miscellaneous
Preliminary Register
Sessions

Case No. CC 1034 of 2025

Depositions of PW -1 witness for ________ Prosecution / Defence / Court

Name : ராபின்

Father's Name : கோம்பராஜ்

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 29th **day of April** 2026.

**(எதிரி ஆஜர்படுத்தப்பட்டார். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். போலீசார் சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினார்கள்)**

**அரசு தரப்பில் முதல்விசாரணை**

1. நான் கோவை மாவட்டம் BDO காலனியில் குடியிருந்து கொண்டு பெயிண்டிங் வேலை பார்த்து வருகிறேன். கடந்த 17.08.2025 ஆம் தேதி ஐயப்பன் மெஸ்சிற்கு எதிராக எதிரி என்னை வருமாறு அழைத்தார். அப்பொழுது நேரம் காலை சுமார் 11.00 இருக்கும். அவர் என்னை தண்ணி அடிக்க வருமாறு அழைத்தார். நான் ஏற்கனவே மது அருந்தி இருந்ததால் வேண்டாம் என கூறினேன். எதிரி என்னை பார்த்து, “நான் அழைத்தால் வரமாட்டாயா” என கேட்டு கெட்ட வார்த்தையால் பேசினார். மேலும் எதிரி என்னை அடிக்க வந்தார் நான் உடனடியாக என்னுடைய மேஸ்திரிக்கு போன் செய்து எதிரி என்னை அடிக்க வருவதாக தெரிவித்து அவரை வருமாறு அழைத்தேன். என்னுடைய மேஸ்திரியின் பெயர் மோகன் பிரபு ஆகும். என்னுடைய மேஸ்திரி மோகன் பிரபு எதிரையை பிடித்துக் கொண்டார். அப்பொழுது எதிரி கொண்டு கீழே உடைந்து கிடந்த பியர் பாட்டில் கொண்டு

எனது இடது முன்பக்க தலையில் அடித்தார். அவ்வாறு என்னை அடித்ததில் என்னுடைய தலையிலிருந்து ரத்தம் வந்தது.

2. உடனடியாக என்னுடைய நண்பர் வாசுதேவஹரி அவர்கள் என்னை சூலூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார். நான் சிகிச்சை பெற்றுக் கொண்டு நேரடியாக சூலூர் காவல் நிலையம் சென்று புகார் அளித்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் என்னால் காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்டது தான். புகார் **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேலும் நான் புகார் கொடுத்த பிறகு எதிரி, “நான் வழக்கிலிருந்து வெளியே வந்தால் உன்னை கொன்று விடுவேன்” என மிரட்டினார். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்திலுள்ள பியர் பாட்டிலால் தான் எதிரி என்னை தாக்கினார். மேற்படி புகைப்படம் **அ.சா.பொ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. நான் தற்பொழுது முதல் விசாரணையில் சொன்ன விவரத்தை தான் போலீசார் விசாரித்த பொழுதும் சொன்னேன் என்றால் சரிதான். நான் அளித்த புகாரிலும் முதல் விசாரணையில் சொன்ன விபரத்தை தான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எதிரியை சம்பவத்திற்கு சுமார் பத்து வருடத்திற்கு முன்பு இருந்து எனக்கு தெரியும் என்றால் சரிதான். நானும் எதிரியும் ஒன்றாக தான் வேலை செய்து வந்தோம் என்றால் சரிதான். மோகன் பிரபு எங்களுடைய ஓனர் என்றால் சரிதான். வாசுதேவஹரி எங்களுடன் பணிசெய்தவர் என்றால் சரிதான். நான் அளித்த புகார் மற்றும் விசா விசாரணையின் பொழுதும் பியர் பாட்டிலால் அடித்ததாகத்தான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். தற்பொழுது நீதிமன்றத்தில் உள்ள பியர் பாட்டில் உடைந்த நிலையில் உள்ளது என்றால் சரிதான்.

2. எதிரி எனக்கு என்ன செல்போன் எண்ணிலிருந்து அழைத்தார் என அவருடைய செல்போன் எண் குறிப்பிட்டு நான் அளித்த புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான். மேலும் என்னை போலீசார் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்த பொழுது, நான் எதிரி குடித்துவிட்டு பலமுறை பிரச்சனை செய்ததாக சொல்லியுள்ள நிலையில் எங்கெல்லாம் பிரச்சனை செய்துள்ளார் என்றால், குடித்துவிட்டு ஒயின் ஷாப் அருகே பிரச்சனை செய்துள்ளார். நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றும், நான் சொல்வது போல் குடித்துவிட்டு பிரச்சினை செய்திருந்தால் அதற்காக போலீசார் நடவடிக்கை எடுத்திருப்பார்கள் என்றும், நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடைபெறாததால்தான் எந்த வழக்கும் அவர் மீது பதிவு செய்யப்படவில்லை என்றால்

சரியல்ல. நானும் எதிரியும் ஒன்றாக வேலை செய்த இடத்தில் எனக்கும் எதிரிக்கும் சம்பளம் சம்பந்தமாக பிரச்சனை இருந்து வந்தது என்றும் மேற்படி பிரச்சனையை மனதில் வைத்து எதிரி மீது பொய்யான புகார் கொடுத்து பொய் சாட்சியம் அளித்து வருகிறேன் என்றால் சரியல்ல.

3. ஐயப்பா மெஸ் முன்பாக சிசிடிவி கேமராக்கள் உள்ளது என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொன்னது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றும் எனக்கும் எதிரிக்கும் இருந்த முன்விரோதத்தால் பொய்யான புகார் கொடுத்து அதற்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை

**Signature of Witness**

**Sd./-T.Arunkumar**
**Judicial Magistrate,**
**Sulur.**